முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஜனாதனர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

14.04.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **ஞான குருவே அரங்கா போற்றி**
   **ஞானிகளை பூஜிக்கும் அரசா போற்றி**
   **தான தருமமே யுகமாற்றம் தருமென**
   **தருமபலம் கொண்ட தேசிகா போற்றி**
2. போற்றியே நித்ய பிரசன்ன ஆசி
   புகலுவேன் **விகாரி தகரின் திங்கள்**
   **உற்றதொரு முதல் திகதி கதிர் வாரம்**
   **(விளம்பி வருடம் பங்குனி மாதம் 31ம் நாள் 14.04.2019, ஞாயிற்றுக்கிழமை)**
   **உரைத்திடுவேன் ஜனாதனர் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
   உயர்வான ஞான பலம் காண
   ஞான ஆண்டாக வரும் விகாரி
   ஞானபண்டிதன் வருகைக்கான ஆண்டாகும்
4. ஆகவே அரங்க மகானின்
   அவதாரம் புரிந்த மக்கள்
   யுகமாற்ற உயர் சேவையில்
   உயர்வாக தங்கள் நிலை கூட்டி
5. கூட்டியே அரங்கன் கொள்கைவழி
   குறையா செயல்பாடு பெருக்கி
   தட்டாது தருமம் வளர்த்து வர
   தவராசனுக்கு சித்தி பல கூடி
6. கூடியே ஆற்றல் பெருக்கமுடன்
   குவலயமே அரங்கன் தயவு பெற்று
   நாடிடும் மக்களிடை சிறப்பறிவு
   ஞானவான்களே பதவிக்கு வந்து
7. வந்துமே வடிவேலனை ஏற்கின்ற
   வல்லமையான ஞான ஆட்சி மலரும்
   சிந்தைபட சேவை ஆற்றிவரும்
   செப்பிடுவேன் அரங்கன் சீடர்கள்
8. சீடர்கள் உன் வெளிப்பணியென
   சேவையை விரிவுபட செய்து
   தடைபடா தருமம் பெருக்கிட
   தரணியில் தரும பலம் கூடி

9. கூடியே அனைவருக்கும் உள்ளே
குறையிலா தயை பெருகிட
நாடிடுவோம் ஞானிகள் துணைபட
நல்கி உயர் சிந்தை வளர்த்து

10. வளர்த்து வருகின்ற மக்களையும்
வல்லமைபட கலியுக மாற்றத்துக்கு
தளர்வில்லா ஞானி ஆக்கி
தவராசனுக்கு துணை சேர்ப்போம்

11. சேரவே ஞானிகள் சக்திபட
செப்பிடுவேன் கலியுகம் நிலைமாறி
மாறுமே ஞானயுகம் ஆகவே
மொழிந்திட்ட நித்ய பிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் ஜனாதனர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

ஞானம் கூறி மக்களை ஞானவழி தனிலே நடத்துகின்ற ஞான குருவே அரங்கமகா தேசிகனே போற்றி! போற்றி!! முற்றுப்பெற்ற ஞானிகளை பூஜிக்கும் ஞான அரசே போற்றி போற்றி. தான தருமமே உலக மாற்றத்தை தரும் என்றே அளவிலாது தர்மங்களைச் செய்து, தருமபலம் பெருக்கிய தருமத்தலைவனே அரங்கமகா தேசிகனே போற்றி போற்றி என அரங்கா உம்மைப் போற்றியே உலக நலன் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் முதல் நாள் 14.04.2019, ஞாயிற்றுக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல் தனையே ஜனாதனர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ஜனாதனர்.

ஞான ஆண்டாக வருகின்ற இந்த விகாரி ஆண்டானது ஞானபண்டிதன் முருகப்பெருமானின் வருகைக்கான வெளிப்படும் ஆண்டாகும். ஆதலினாலே முருகனே அரங்கன், அரங்கனே முருகன் என்பதையும் முருகப்பெருமானின் அவதாரமே அரங்கமகா தேசிகனார் என்பதையும் அரங்கமகானின் அவதார நோக்கத்தையும் யுகமாற்றம் செய்து மக்களை காக்கவே அரங்கர் இப்புவியினில் அவதரித்துள்ள உண்மையையும், புரிந்தும், அறிந்தும், தெளிவும் பெற்ற மக்கள் எல்லோரும் யுகமாற்றத்திற்கான தொண்டுகளில், செயல்பாடுகளில் உயர்வாக தங்களது நிலையினை உறுதிப்படுத்திக் கொள்வதோடு யுகமாற்ற செயல்பாடுகளை விரிவாகவும், அதிகமாகவும் துரிதகதியிலும் செயல்பட வேண்டுமப்பா. அவர்கள் எல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் கொள்கைகள் மூலமாக குறைவற்ற செயல்பாடுகளை அதிகப்படுத்திட வேண்டும். அவரவரும் தங்களால் இயன்ற அளவு தர்மங்களை அதிகமாக செய்து வர வேண்டும்.

அரங்கனை பின் தொடர்வோர் எல்லாம் கொள்கை வழிநடந்து, யுகமாற்ற செயல்பாடுகளை பெருக்கி தர்மங்களையும் செய்துவர ஆறுமுக அரங்கனுக்கு அவை பக்கபலமாக அமைந்திடும். அரங்கமகா தேசிகனாருக்கு சித்தி பல உண்டாகி, அளவற்ற ஆற்றலும் பெருகி இவ்வுலகமே ஆறுமுக அரங்கனின் தயவை பெறும் சூழ்நிலை அமையும்.

அரங்கனின் தயவைப் பெற்று கடைத்தேற அரங்கனை நாடிவரும் மக்களுக்கு சிறப்பறிவு பெருகும், சிறப்பறிவு பெற்றிட்ட ஞானவான்களே பதவிகளுக்கு வந்து முருகப்பெருமானை முழுமுதற் தலைவனாக ஏற்றுக்கொண்டு இவ்வுலகினில் வல்லமைமிக்க ஞான ஆட்சி மலர்ந்திடும்.

அற்புதமான சிந்தையுடன் சமுதாயத்திற்காக சிறப்பாக சேவைகளை செய்துவரும் அரங்கனின் தொண்டர்கள் சீடர்கள் குடிலினை சார்ந்தும், வெளிநாடுகளிலும், பிறவகையிலும் தமது சேவைகளை

விரிவுபடச் செய்து தடையின்றி அரங்கனின் தருமச் செயல்கள் நடந்திட வகை செய்திட வேண்டும். தடையின்றி அரங்கன் தர்மம் வளரவளர, உலகினில் தருமபலம் பெருகி உலக மக்களிடையே தயவு உணர்வு பெருகிடும். மக்களிடையே தயவு பெருகிட ஞானிகளின் துணை அவர்களுக்கு உண்டாகும். ஞானிகள் துணை பெருக அவர்களுக்குள் உயர்வான சிந்தனைகள் வளர்ந்து அவர்கள் எல்லாம் வல்லமை மிக்கவர்களாக ஆக்கி, கலியுக மாற்றத்தை செய்யும் தகுதியுடைய ஞானிகளாக ஆக்கி தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் தலைமையில் அரங்கனுக்கு துணையாய் சேர்ப்போம் ஞானிகள் நாங்கள்.

முருகப்பெருமானின் திருவருளும் தலைமையும் முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கன் தலைமையும் சிறப்புமிக்க ஞானத் தொண்டர்கள் துணையும் உலக ஞானிகளின் சக்தியும் ஒன்றிணைந்து கலியுகமே நிலைமாறி ஞானயுகமாக மாறிடும் எனக் கூறுகின்றார் மகான் ஜனாதனர்.

–சுபம்–